**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.09
https://ngmtamil.in/

# பண்டைய தமிழரின் அடிப்படை உரிமைகள்

**க.கவிமணி,** MA,LLB,

தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், கேஜி கலை அறிவியல் கல்லூரி, கோவை 641035

ORCID ID: 0009-0003-5290-0457, 9629340594 / Kavimanitamilalagi@gmail.com

GOOGLE SCHOLAR ID: https://scholar.google.com/citations?user=xY4vhXsAAAAJ

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் இலக்கியங்களில் அடிப்படை உரிமைகள் வெளிப்படையாக சட்ட வடிவில் சுட்டிக்காட்டப் படவில்லை. இருந்தாலும் மறைமுகமாக மக்களுக்கு தேவையான உரிமைகளை தமிழ் இலக்கியம் கதைகள், பாடல்கள் மற்றும் வரலாற்று செய்திகள் மூலம் மக்களிடையே கொண்டு செல்கிறது. அவை சட்ட உரிமைகள் எனும் நேரடி பொருளில் இல்லாமல் அறம், முறைமை, நீதி எனும் சொற்களால் மக்களிடையே சென்று சேர்கிறது. நடைமுறையில் சட்டத்தின் முன் அனைவரும் சமம் எனும் கொள்கை பின்பற்றப்படுகிறது. அடிப்படை உரிமைகளை இந்திய அரசமைப்பு சட்டம் மக்களுக்கு தேவையான அடிப்படைவசதிகளை கட்டமைத்து வழங்குகிறது. அதில் சுதந்திரம், சமத்துவம், கல்வி கற்கும் உரிமை, உணவு, உடை, இருப்பிடம் என அனைத்தும் உள்ளடங்கும். இவற்றை தமிழ் இலக்கியங்களில் வழியே தமிழ் மக்கள் எவ்வாறு கையாண்டனர் அல்லது பின்பற்றினர் என்பதை ஆய்வதே இக்கட்டுரை.

இந்திய அரசமைப்பு சட்டம், சுதந்திரம், சமத்துவம், கல்வி கற்கும் உரிமை, உணவு, உடை, இருப்பிடம்

**முன்னுரை**

அடிப்படை உரிமைகளான உணவு, உடை, இருப்பிடம் தவிர்த்து மற்ற உரிமைகளான சமத்துவ உரிமை, சுதந்திர உரிமை, கல்வி உரிமை, மதச்சுதந்திரத்திற்க்கான உரிமை, பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்க்கான உரிமை, சுரண்டலிலிருந்து பாதுகாப்பு உரிமை இவை அனைத்தும் ஒரு தனி மனிதனுக்கு தேவையான அடிப்படை உரிமைகளாகும். தமிழ் இலக்கியங்கள் பண்டைய சமூக மக்கள் இவற்றை எவ்வாறு பின் பற்றினர் என்பதையும் அறம் சார்ந்த இலக்கியங்களில் மட்டுமல்லாமல் காப்பியம் மற்றும் பக்தி இலக்கியங்களிலும் கதைகள் பாடல்கள் மூலமாக உணர்த்துகின்றது என்பதை தமிழ் இலக்கியங்கள் வழி காண்போம்.

. எழுதப்படாத சட்டமாக அடிப்படை உரிமைகள் அறம் மற்றும் நீதி எனும் பொருண்மையில் மக்களிடையே இலக்கியங்கள் கொண்டு சேர்க்கின்றன.

**சமத்துவ உரிமை**

பண்டைய தமிழ் இலக்கியங்கள் சமத்துவ உரிமையை பாடல்கள் வாயிலாக திறம்பட விளக்குகின்றன. பிறப்பினால் அனைவரும் சமம். செல்லுமிடம் எல்லாம் நம்முடையதே, எல்லா மனித உறவும் நம்முடைய உறவுகளே எனும் அடிப்பபடியில் கணியன் பூங்குன்றனாரும், வள்ளுவரும் சமத்துவத்தை மக்களிடையே பரவச்செய்கின்றனர். பாரதியோ இன்னும் மேல் சென்று

**"சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்**

**தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் "**

**-பாரதியார் பாப்பா பாட்டு (15)**

என சமத்துவக் கொள்கையை எளிமையாக விளக்குகிறார். பிறப்பால் அனைவரும் சமம். செய்யும் தொழிலால் தான் உயர்வு தாழ்வு வருகிறது என்பதனை,

**"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**

**செய்தொழில் வேற்றுமை யான்"**

**-பொருட்பால், குடியியல், அதிகாரம் 98, குறள் எண் 972**

பிறப்பால் அனைவரும் சமம் என வள்ளுவர் தெளிவாக கூறுகிறார். ஔவையோ தொழில் அடிப்படையிலான சாதி ஒழிந்தால் மட்டுமே ஒருவன் உயர்ந்த நிலைக்கு செல்வான் என்கிறாள்.

**"சாதி இரண்டொழிய வேறில்லை என்றெதமிழ்**
**நீதிபதி சண்டாளன் தன்னுடனும் –ஓதும்கோ**
**முனிவனும் வேதியனும் மூரித்தீப் பார்ப்பானும்**
**புனிற்றா விலக்கினமும் பூ"**

**- ஔவையார், நல்வழி**

மனித சமூகத்தில் சாதி இல்லை. கல்வியும் நல்ல குணமும் தான் ஒருவனை உயர்த்தும் என்கிறாள்.

**சுதந்திர உரிமை**

பண்டைய இலக்கியங்களில் சுதந்திரத்திற்கான உரிமை என சட்ட நெறிகள் வகுக்கப்படவில்லை. மாறாக வாய்மொழி சட்டங்களாக பின்பற்றப்பட்டன. பெண்கள் விரும்பிய கல்வி கற்பதில் உரிமை பெற்றிருந்தனர். பெண்கள் காதல் கொள்ளவும், விரும்பிய ஆடவனை மணக்கவும் உரிமை பெற்றிருந்தனர். அவற்றை களவு வாழ்க்கை எனவும் தன்னேற்பு அல்லது சுயம்வரம் எனவும் கூறினர். அக இலக்கியங்களில் தன்னேற்பு என்பது தானாக முடிவு செய்து தனக்கு விருப்பமான தலைவனையோ அல்லது தலைவியையோ தேர்ந்தெடுக்கும் முறை. பாணர்களும் விறலியரும் கலைகளை வளர்ப்பதற்காக ஊர் ஊராகச் சென்று கலைகளை அரங்கேற்றம் செய்யவும், தங்கள் திறமைகளை வெளிப்படுத்தவும் சுதந்திரம் பெற்றிருந்தனர். அரசர்களின் ஆதரவில் வாழ்ந்தாலும், கலைஞர்கள் தங்கள் கலைத்திறனை வெளிப்படுத்தவும் அதன் மூலம் தலைவனை புகழவும், வசைபாடவும் சுதந்திரம் பெற்றிருந்தனர்.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**நெடுமதில் வரைப்பின் கடிமனை இயம்ப,**

**ஆங்கு இனி திருந்த வேந்தனொடு, ஈங்குநின்**

**சிலைத்தார் முரசும் கறங்க,**

**மலைத்தனை என்பது நாணுத்தகவு உடைத்தே.**

**-புறநானூறு பாடல் 36**

புறநானூற்று பாடலில் சோழன் குளமுற்றத்துஞ்சிய கிள்ளி வளவன் கருவூரை முற்றுகையிட்ட பொழுது ஆலந்தூர் கிழார் மன்னனின் தவறை எடுத்துரைக்கிறார். மன்னன் தவறிழைக்கும்போது புலவர் மன்னனை இடித்துரைக்கிறார். அத்தகைய அளவுக்கு மக்கள் சுதந்திரமாக வந்துள்ளனர் என்பதை பண்டைய இலக்கியங்கள் கண்முன் காட்சிப்படுத்துகின்றன.

**கல்வி உரிமை**

கல்வி என்பது தனி மனித ஒழுக்கத்தையும் அறத்தையும் போதிக்கும் சிறந்த செல்வமாக போற்றப்படுகிறது. சங்க காலம் முதல் இக்காலம் வரை கல்விஅறிவு தனி மனிதனை மேம்படுத்தும் சிறந்த வழியாக பார்க்கப்படுகிறது. அத்தகைய கல்விக்கான உரிமையை சங்க இலக்கியத்தில் 30 மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் பெற்றிருப்பது வியக்கத்தக்க சான்றாக உள்ளது. அறநூல்களாக கருதப்படும் நூல் அனைத்தும் கல்வியின் முக்கியத்துவத்தை பற்றி கூறுகின்றன. கல்வி எப்படி அடிப்படை உரிமைகளின் கீழ் அமையும் என்பதற்கு தக்க சான்றுகள் அறநூல்களே ஆகும்.

**"இளமை பருவத்து கல்லாமை குற்றம்"**

**-நான்மணிக்கடிகை பாடல் 91 விளம்பினகானர்**

என அடிப்படை கல்வி உரிமைக்கான சட்ட விதியை வகுத்துக்கூறுகிறது அற இலக்கியம். கல்வி கற்பதற்காகப் பிரிந்து செல்வதை **''ஓதற்பிரிவு''** எனத் **தொல்காப்பியம்** குறிப்பிடுகின்றது. கணக்காயர் மற்றும் மாணாக்கர் நடத்த வேண்டிய முறை பற்றி **நன்னூல்** தெளிவாக வரையறுக்கிறது. பௌத்த விகாரங்களும் சமணப் பள்ளிகளும் கல்வி நிலையங்களாக செயல்பட்டன என்பதை இலக்கிய வரலாற்று நூல்கள் மூலம் அறியமுடிகிறது.

**மதச்சுதந்திரத்திற்க்கான உரிமை**

பண்டைய தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்களை பக்தி மூலமாகவும் வழிபாட்டு முறைகள் மூலமாகவும் அறியமுடிகிறது. பக்தி இயக்கத்தின் உச்ச காலகட்டத்தில் பக்தி இலக்கிய நூல்கள் பல தமிழ் மொழியில் தோன்றின. பக்தி இயக்கங்களின் வளர்ச்சியால் பலதரப்பட்ட சமயங்களும் வளரத்தொடங்கின. ஒவ்வொரு சமயமும் தங்களுக்கு ஏற்றாற்போல கொள்கைகளையும் கோட்பாடுகளையும் வகுத்துக்கொண்டு மக்களிடையே அற நெறியையும் மனித மேம்பாட்டுக்கான ஒழுக்கங்களையும் போதித்தன. அத்தகைய சமயங்களின் கொள்கைகள் ஏற்புடையதாயின் அதை ஏற்றுக்கொண்டு மக்கள் இன்றளவும் விரும்பிய மதத்தினை பின்பற்றுகின்றனர். சமயங்கள் வளர வளர சமய நூல்களும் வளர்ச்சி பெற்றன. அதில் மணிமேகலை காப்பியம் பலதரப்பட்ட சமயங்களை சார்ந்த செய்திகளை விளக்கினாலும்,

**"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்;**

**பிறவார் உறுவது பெரும் பேரின்பம்;**

**பற்றின் வருவது முன்னது;பின்னது**

**அற்றோர் உறுவது; அறிக!" -மணிமேகலை, காதை 2, 64-67**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

இப்பாடலின் கருத்தை ஏற்றுக்கொண்டு மணிமேகலை மனதார பௌத்த மத கொள்கைகளை பின்பற்றினாள்.

கடுமையான வயிற்று வலி காரணமாக சமண சமயத்தை விடுத்து சைவ சமயத்திற்கு மாறினார் தருமசேனர். தன்னை அழைத்து வரும்படி கட்டளையிட்ட மன்னனிடம்,

**"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்"**

**-மறுமாற்றத்திருத்தாண்டகம், திருநாவுக்கரசர், ஆறாம் திருமுறை, பதிக எண் 6.98**

நான் யாருக்கும் அடிமை இல்லை என வினவுவதாக பாடல் அமைகிறது. தான் விரும்பிய கடவுளை வழிபட தாக்கு உரிமை உண்டு, தான் யாருக்கும் அடிமை இல்லை, என நாவுக்கரசர் கூறுவது தன்னுடைய உரிமைக்கு அவரே குரல் கொடுத்துள்ளது ஒரு நுட்பமான சுதந்திரத்தை வலியுறுத்துகின்றது. இவற்றை கொண்டு தனி மனிதனின் மதத்திற்க்கான சுதந்திர உரிமையை தெளிவாக விளங்கிக்கொள்ள முடிகிறது.

**பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்க்கான உரிமை**

தமிழ் இலக்கியம், பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தை ஒரு அடிப்படை உரிமையாகக் கருதி, அதை அறநெறி மற்றும் சமத்துவத்தின் அடிப்படையில் முன்வைக்கிறது. இலக்கியவாதிகள், புலவர்கள் மற்றும் சான்றோர்கள் மூலம், சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்கள், விமர்சனங்கள் மற்றும் சிந்தனை சுதந்திரம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் ஒரு முக்கிய ஊடகமாக இலக்கியங்கள் திகழ்கின்றன.

**சிலம்பிற்குத் தன்சினை கூற்றம் நீள்கோடு**
**விலங்கிற்குக் கூற்றம் மயிர்தான் - வலம்படா**
**மாவிற்குக் கூற்றமாம் ஞெண்டிற்குத் தன் பார்ப்பு**
**நாவிற்கு நன்றல் வசை**

**-சிறுபஞ்சமூலம் காரியாசான் பாடல் எண் 11**

பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தை தவறாக பயன்படுத்தினால் ஏற்படும் துன்பத்தை ஆசிரியர் விளக்குகிறார். மட்டுமல்லாது சங்க காலத்தில் முடியாட்சி இருந்தாலும், புலவர்கள் அரசர்களைத் தவறு செய்யும்போது நேருக்கு நேர் விமர்சிக்கும் சுதந்திரம் பெற்றிருந்தனர். அரசரின் தவறுகளைச் சுட்டிக்காட்டும் **"அறநெறி"** இலக்கியங்கள், ஆட்சியாளர்களுக்குக் கருத்து சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தின.

நீதி நூல்கள், ஆட்சியாளர்கள் நீதியை வழுவாமல் நடக்க வேண்டும் என்பதையும், மக்கள் தங்கள் கருத்தை அச்சமின்றிச் சொல்ல வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றன.

**சுரண்டலிலிருந்து பாதுகாப்பு உரிமை**

**"மன்னன் உயிர்எனக் கொள்வர்"**

**-புறநானூறு 186**

மன்னனின் உயிரே மக்களின் உயிர் என மக்கள் நினைப்பார்கள். அப்படிப்பட்ட மக்களை துன்புறுத்தினால், காக்காவிட்டால் அந்த மன்னன் மக்களால் வெறுக்கப்படுவான்.

**''அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**செல்வத்தைத் தேய்க்கும் படை''**

**-திருக்குறள், கொடுங்கோண்மை, அதிகரம் 56, எண் 555**

மக்களை துன்பப்படுத்தும் மன்னனுக்கு எதிராக குரல் கொடுக்க மக்களுக்கு உரிமை உண்டு. மேலும் அப்படி ஏழை மக்களை துன்புறுத்தி வறுத்துபவனின் ஆட்சியானது விரைவில் கெடும் என்கிறது குறள். நல்லாட்சி இல்லையெனில் மக்கள் வாழ்வு பாதிக்கப்படும். மக்கள் நலனை காக்கும் அரசனே உலகிற்கு ஆதாரம் என்பதை உணர்ந்து அதிகாரத்தில் இருப்பவர்கள் பொறுப்புடன் செயல்படவேண்டும் என்பதை,

**நெல்லும் உயிர் அன்றே; நீரும் உயிர் அன்றே; மன்னன்**

**உயிர்த்தே மலர்தலை உலகம்; அதனால், யான்உயிர் என்பது**

**அறிகை வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே.**

**-புறநானுறு 186**

என்று புறநானுறு பாடல் வரிகள் மன்னனின் கடமைகளை விளக்குகிறது.

**"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்**

**காவலன் காவான் எனின்."**

**-திருக்குறள், கொடுங்கோண்மை, அதிகரம் 56, குறள் 560**

மன்னன் செங்கோல் ஆட்சி செய்ய வேண்டும். கடமை தவறும் பொழுது மக்கள் கடுமையாக துன்பப்படுவர். ஆட்சி சரியாக இல்லாவிட்டால், நாட்டின் பொருளாதாரமும் (ஆபயன்) அறிவார்ந்த கலாச்சாரமும் (நூல்) அழிந்துபோகும் என்பதை இக்குறள் வன்மையாக எச்சரிக்கிறது.

**முடிவு**

**உரிமை** என்பது இந்திய சட்டப்புத்தகங்களில் மட்டும் பிறந்த சொல் அல்ல. அது சங்கத் தமிழரின் வாழ்வியலிலேயே வேரூன்றியிருந்த ஓர் உயரிய உண்மை. பிறப்பால் மனிதன் உயர்வும் தாழ்வும் அற்றவன் என்றும், அன்பும் அறமும் சேர்ந்த வாழ்வு சமூகத்தின் ஆதாரம் என்றும் பண்டைய தமிழர் உணர்ந்து வாழ்ந்தனர். பண்டைய தமிழர் வகுத்த அறநெறிகள் வெறும் இலக்கிய வரிகளாக மட்டும் நிற்கவில்லை. காலம் கடந்தும் மனித வாழ்வை வழிநடத்தும் எழுதப்படாத சட்டங்களாகவே நிலைத்துள்ளன. சங்க இலக்கியங்கள் கூறிய சமத்துவம், நீதி, மனிதநேயம் கருத்துரிமை போன்ற உயரிய சிந்தனைகளே இன்று நவீன சட்டங்களின் அடித்தளமாகத் திகழ்கின்றன. அரசின் சட்டப் புத்தகங்களில் எழுத்தப்படுவதற்கு முன்பே, தமிழர் மனங்களில் அறமாக எழுதப்பட்டிருந்த அந்த நெறிகளே சமூகத்தை ஒழுங்குபடுத்தின. எனவே பண்டைய தமிழ் இலக்கியங்கள் மனித உரிமைகளையும் சமூக நீதியையும் காக்கும் எழுதப்படாத சட்டங்களின் உயிருள்ள வடிவமாகும்.

**சான்றாண் விளக்கம்**

[1]. ஆசிரியர் பாரதியார், பாரதியார் கவிதைகள், பாப்பா பாட்டு (15), திருமகள் நிலையம் சென்னை -17

[2]. பரிமேலழகர் உரை – திருக்குறள் – சாரதா பதிப்பகம் – சென்னை –2002

[3]. ந.மு.வேங்கடசாமி நாட்டார், ஔவையார், நல்வழி, பாரிநிலையம் சென்னை

[4]. உரையாசிரியர் புலவர் அ. மாணிக்கனார், புறநானூறு (மூலமும் உரையும்) (முதல் தொகுதி), வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 1999

[5]. நான்மணிக்கடிகை, கௌரா பதிப்பகக் குழுமம், திருச்சி -1

[6]. மணிமேகலை ந.மு.வேங்கடசாமி நாட்டார், கௌரா பதிப்பகக் குழுமம், திருச்சி -1

[7]. திருநாவுக்கரசர் அருளிய தேவராம், பிரேமா பிரசுரம் சென்னை -24

[8]. காரியாசன் – சிறுபஞ்ச மூலம் (மூலமும் உரையும்) – சாரதா பதிப்பகம் – சென்னை – 2019